முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1382

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.07.2023, புதன்கிழமை

1. யோகராஜனே அரங்கா வாழ்க
   யோகிகள் ஞானிகள் சித்தர்களை படைக்க
   வகையான அவதாரம் புரிந்த
   வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   விளம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 27ம் நாள், 12.07.2023, புதன்கிழமை)
   இனிமைபட இந்த பேருலகமெல்லாம்
   எளிமைபட ஞானத்தை மக்களுக்கு எடுத்துச்சென்று
3. சென்றுமே அன்னதான சேவையாற்றி
   சித்திமிகு ஞானவான்களை படைக்க
   நன்றான பசிபிணி விரட்டிக்காக்கும் நல்தர்மம் வளர்த்து உலகமெல்லாம்
   ஞானிகளைப் படைக்கும் அரங்கனே
4. அரங்கனே உந்தனுக்கு ஆறுமுகன் யான்
   ஆற்றல்பட உடனிருந்து அருள்புரிய
   அப்பனே நித்தம் நித்தம் அரங்கன் உமக்கு
   நிலமதனில் பல்வேறு வரங்கள் தந்து
5. சித்தமாய் உன்னுள் இருந்து ஆறுமுகன் யான்
   சித்திகள் பல அருளி வருகின்றேன்
   வருகவே அரங்கன் உன் பதம் பற்றி
   வணங்கி சேவையாற்றும் மக்களுக்கு
6. மக்களுக்கு வேண்டாமலே கேட்காமலே
   மகத்துவம் பட வரங்கள் தன்னை
   தேக்கமின்றி ஆறுமுகன் யான்  உன்வழி வழங்குகின்றேன்
   தேவைகளை பூர்த்திசெய்து அவரவர்கள்

7. அவரவர்கள் அளவிலா உன்சக்திவழி
ஆற்றல் பட ஞானவான்களாக ஞானிகளாக
அகிலத்தில் சிறக்க அருள்புரிகின்றேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—